# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

**2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ம் தேதி பிற்பகல் மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

பொருள் – 1

நகராட்சி ஆணையர் அவர்களின் ஏப்ரல் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பொருள் – 2

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2018 ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பொருள் – 3

வார்டு எண்.15 புதிய பேருந்து நிலையம் நரசிம்ம விலாஸ் பகுதியில் மழை நீர் வடிகாலுக்கு cover slab அமைப்பதற்கும், பின்புறம் உள்ள மழை நீர் வடிகால் அமைப்பதற்கும் மதிப்பீடு ரூ.2.10 இலட்சம் ஆகும். மன்றப்பொருள் ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) பொது நிதியிலிருந்து பணி செய்திட அனுமதிக்கலாம்.

பொருள் –4

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12, மலை பூங்கா பகுதியில் உள்ள மழை நீர் வடிகாலுக்கு cover slab அமைப்பதற்கும், மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.0.75 ஆகும். மன்றப்பொருள் ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.

**பொருள் – 5**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி அலுவலகம் அருகில் உள்ள தேவராஜனார் பூங்காவில் SWM-ON SITE COMPOSTING பணி மேற்கொள்ளப்பட உள்ளது. மக்கும் குப்பைகளை கொட்டி உரமாக்க டப்ஸ் மற்றும் ஷெட் அமைக்க மதிப்பீடு ரூ.0.80 இலட்சம் மன்றப் பொருள் வைக்க அனுப்பப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.

**பொருள் – 6**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட தூக்குமரக்குட்டை பகுதியில் உள்ள நகராட்சி உரகிடங்கில் 2006ம் ஆண்டு கட்டப்பட்ட Segregation shed மிகவும் பழுதாகி பயன்பாடற்ற நிலையில் உள்ளது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குப்பைகளை பிரித்தெடுத்து உரம் தயாரிக்கும் பணிக்காக பணிகள் நடைபெற்று வருகின்றன. அவ்விடத்தில் உள்ள பழுதடைந்த AC Sheet and துருபிடித்த column proline போன்றவற்றை அப்புறப்படுத்திடவும் ஏலத்தில் விடுவதற்கு மன்ற பொருள் வைக்க அனுமதிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.

**பொருள் – 7**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25, மேலைமையூர் பிள்ளையார் கோயில் தெரு மற்றும் வார்டு எண்.27, குண்டுர் சர்ச் தெரு உள்ள நகராட்சி பொது கிணற்றுக்கு மேலே கிரில் மூடி அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.65,000/– ஆகும். மன்ற பொருள் வைக்க ஒப்புதலுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.

பொருள் – 8

செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.33, 7வது சர்க்கிள் ரோட்டில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து விட்டதால் மழை நீர் வெளியேறும் வகையில் அதனை இடித்து அப்புறப்படுத்தி புதிய சிறுபாலம் மற்றும் மழை நீர் வடிகால் அமைக்க மதிப்பீடு ரூ.2.15 இலட்சம் ஆகும். மன்றப்பொருள் வைக்க ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.

பொருள் – 9

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பள்ளிகளில் பெறப்பட்ட மனுக்களை தொடர்ந்து நகராட்சி பள்ளிகள் நேராய்வு செய்யப்பட்டு நத்தம் நகராட்சி பள்ளி, அனுமந்தபுத்தேரி நகராட்சி பள்ளிகளில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.9.80/– இலட்சம் ஆகும். மன்ற பொருள் வைக்க அனுப்பப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.

பொருள் – 10

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஏப்ரல் 2017ல் கோடைகால குடிநீர் தட்டுபாடு காரணமாக பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட புகார்களை தொடர்ந்து அனைத்து வார்டுகளிலும் குடிநீர் குழாய் இணைப்பில் நேரடியாக மோட்டார் பொருத்தி இருக்கும் குடியிருப்புகளிலும் நகராட்சி அனுமதியில் குடிநீர் இணைப்பு பெற்று இருக்கும் குடியிருப்புகளிலும் உள்ள மோட்டார் மற்றும் அனுமதி இல்லா இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. கீழ்கண்ட மின்மோட்டார்கள் நகராட்சி சட்ட விதிகளின் கீழ் உரிய அறிவிப்பு சம்மந்தப்பட்ட குடிநீர் நுகர்வோருக்கு அனுப்பப்பட்டது. குறிபிட்ட கால கெடுவிற்குள் யாரும் உரிய தொகை செலுத்தி மின் மோட்டார் பெற்றிடவில்லை. எனவே நகராட்சி மூலம் கைப்பற்றிய கீழ் கண்ட விவரப்படி உள்ள மின் மோட்டார்களை

1. நகராட்சி அனுமதி பெற்றுள்ள குடிநீர் இணைப்புகளில் நேரடியாக பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களின் எண்ணிக்கை – 83

2. நகராட்சி அனுமதி இல்லாமல் குடிநீர் இணைப்பில் நேரடியாக பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களின் எண்ணிக்கை – 10
3. மொத்த மோட்டார்கள் 93 எண்ணிக்கையினை பொது ஏலத்திற்கு கொண்டுவர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.297/2017/இ1

பொருள் – 11

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கார்ப்பரேட் நிறுவனங்களின் சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதி பெற்று (சிஎஸ்ஆர்) குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 06.02.2018ல் கருத்துரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் குறைவாக வழங்கிய திருவாளர் வாட்டர் லைப் இந்தியா என்கிற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு (நகர் மன்ற தீர்மான எண்.343 நாள் 07.02.2018) பணிகள் மேற்கொள்ளப்பட்ட வருகின்றன. அப்பணிக்கு மும்முனை இணைப்பு வழங்க அதற்கு உண்டான செலவுத்தொகையினை பெற மன்றத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) EB Bill – Water Life Depost by Municipality

பொருள் – 12

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு 6.50 ஏக்கர் பரப்பளவில் நகரிலிருந்து 3 கிமீ தூரத்தில் தூக்கு மரக்குட்டை என்ற இடத்தில் உள்ளது. இந்நகராட்சியில் செகரிக்கப்பட்ட உரகிடங்கில் பல ஆண்டு காலமாக குவிக்கப்பட்டு குப்பையின் அளவிற்கு Technometic survey map key plan, site plan குவிக்கப்பட்டுள்ள குப்பையை காட்டும் தற்போதைய போட்டோ போன்றவற்றை தயாரிக்க அண்ணா பல்கலை கழகம், சென்னை 600 025 அவர்களிடம் விலைப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணிக்கு அண்ணா பல்கலை கழகம் சென்னை அவர்களின் மூலம் பணி மேற்கொள்ள ரூ.1,77,000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.255/2011/இ1

பொருள் – 13

செங்கல்பட்டு நகராட்சியில் 2017–18ம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண்.2455/2016/ஏ3 தீர்மானம் அனுமதி பெறப்பட்டது. அதன் அடிப்படையில் 6.2.2018ன் பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகளின் விவரம் பின்வருமாறு குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு ஒப்புதலுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (ம) விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | தட்டான் மலை குடிநீர் திட்டம் மற்றும் பாசித்தெரு மேல் நிலை நீர் தேக்கத்தொட்டி ஆகியவற்றை பழவேலி நீரேற்று நிலையத்தில் இணைக்கும் குழாய்களை அமைக்கும் பணி. | 7.58 | 1. ஜி. மனோகர், 0.22 சதவீதம் அதிகம்<br>2. கே. வெங்கடேசலு, 0.15 சதவீதம் குறைவு |

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியோருக்கு பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) குடிநீர் பணியின் அவசியம் கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்குமாறு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.3038/2017/இ1

பொருள் – 14

செங்கல்பட்டு நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4235/2018/பி3 நாள் 07.02.2018 ரூ.6.48 இலட்சத்திற்கு மூன்று சக்கர வண்டிகள் வாங்குவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இப்பணிக்கு 15.3.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஆன்லைனில் ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி 15.03.2018 அன்று டெக்னிகல் பிட் திறக்கப்பட்டு டெக்னிகல் பிட் மட்டும் விதி முறைகளின்படி சரிபார்க்கப்பட்டது. கூர்ந்தாய்வு குழுவில் ஒப்புதல் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் பிரைஸ்பிட் 23.03.2018 அன்று திறந்திட ஒப்பந்ததாரருக்கு தகவல் தெரிவித்ததின் பேரில் வருகை தந்த ஒப்பந்ததாரர் முன்னிலையில் பிரைஸ் பிட் திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| வ.எண். | பணியின் பெயர் (ம) மதிப்பீடு | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1, | மூன்று சக்கர வண்டி வாங்கி வழங்கும் பணி | என்பிபி எரக்டர்ஸ், கோயம்புத்தூர் | சைக்கிள் ஒன்றுக்கு விலை ரூ.17,750/– |

மதிப்பீட்டை விட குறைவான விலை விகிதம் அளித்த திருவாளர்.என்பிபி எரக்டர்ஸ், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
2) எஸ்பிஎம் திட்டப்பணி என்பதாலும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.312/2016/இ1

பொருள் – 15

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 பெரியமணியக்கார தெருவில் உள்ள பள்ளி கட்டிடத்தின் மேற்கூரைகளை சிதிலமடைந்து உள்ளதை சரி செய்யவும் பழுதை சரி செய்யவும் இதர பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.2.80 இலட்சம் மன்றம் அனுமதி வழங்கி உள்ளது. மன்ற தீர்மான எண்.336 நாள் 07.02.2018.

இதனை தொடர்ந்து மேற்படி பணிக்கு 15.03.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (ம) விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | பெரியமணியக்கார தெருவில் உள்ள பள்ளி கட்டிடத்தை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி | 2.80 | 1. கே. வெங்கடேசலு, 0.22 சதவீதம் குறைவு<br>2. ஜி. மனோகர், 0.45 சதவீதம் அதிகம் |

குறைவான விலைப்புள்ளி வழங்கிய திரு. கே. வெங்கடேசலு அவர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.3717/2015/இ1

பொருள் – 16

செங்கல்பட்டு நகராட்சி பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் கணினிகள், பிரின்டர்கள் UPS connections மூலம் இயக்குவதற்கு புதியதாக UPS 65KV ஏழு எண்ணிக்கை வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தோராய மதிப்பீடு (இலட்சத்தில்) | நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | கணினி பிரிவிற்கு யுபிஎஸ் கருவிகள் சப்ளை செய்தல் | 0.50 | M/s.G Soft Systems | மதிப்பீட்டுத் தொகைக்கு சமமாக உள்ளது |
| | | | M/s.Anand Enterprises | 0.79 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு–

மேற்கண்ட இரண்டு நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.G Soft Systems என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவும், தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.657/2018/இ1

பொருள் – 17

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.3622/2017/அ2 நாள் 03.04.2018ன்படி செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான 9 ஆண்டுகள் குத்தகை முடிவுற்ற கடைகளுக்கு அங்காடி மதிப்பின்படி அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்வதற்கு கருத்துரு அனுப்பப்பட்டதற்கு, ஒப்புதல் வரப்பெற்றதை தொடர்ந்து இணைப்பில் உள்ள பட்டியலின்படி குத்தகை கடைகளுக்கு வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டதன்படி கடைகளுக்கான வாடகையை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் உத்திரவிற்கு இணங்க மறு நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு மேற்கண்ட விவரங்களை அனுப்பிடவும் மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1621/2017/அ1

பொருள் – 18

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜிஎஸ்டி சாலை நெடுஞ்சாலை துறையின் மூலமாக அகலப்படுத்தப்பட்டதால் ஏற்கனவே இருந்த குடிநீர் குழாய்கள் முழுவதும் பாதிக்கப்பட்டு ஜிஎஸ்டி சாலை, ஆர்.வி. சாலை, தண்டுக்கரை பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பணி பாதிப்படைந்து விட்டதை தொடர்ந்து அவசர அவசியம் கருதி புதியதாக குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்து துண்டிக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க போர்கால அடிப்படையில் ரூ.6.50 இலட்ச மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயாரித்து தமிழ்நாடு நகராட்சி நிர்வாக சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணிகளை மேற்கொண்டதற்கு மன்றம் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) பின்னேற்பு அளிக்கலாம்.

ந.க.எண்.2428/2016/இ2

பொருள் – 19

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் தினசரி காய்கறி நாளங்காடியில் கட்டணமே வசூலிக்கும் உரிமம் 2015–16ம் ஆண்டு வழங்கப்பட்டது. மேலும் மேற்படி குத்தகைதாரர் செங்கல்பட்டு கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் இந்நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி குத்தகைதாரருக்கு குத்தகை உரிமம் மார்ச் 31 2018ம் தேதியன்று முடிவடைந்ததால் 2018–19ம் ஆண்டிற்கு மேற்படி குத்தகை இனத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்படும் சூழலில் மேற்படி குத்தகைதாரர் ஏலம் மற்றம் ஒப்பந்தப்புள்ளி நடத்துவதற்கு தடை கோரி உயர்நீதிமன்றத்தில் இந்நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண்.2550/2018 மேலும் மேற்படி வழக்கு சம்மந்தமாக உள்ள வழக்கு எண்கள் டபிள்யூ.பி. 9551 முதல் 9559 மற்றும் 9715 முதல் 9777/2017 இந்நகராட்சிக்கு சார்பாக திரு.பி. சீனிவாஸ் அரசு வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு நடத்தி வருகிறார். எனவே வழக்காடு கட்டணமாக ரூ.10000/– அன்னாருக்கு வழங்குவதற்கு தனிஅலுவலர் அவர்களின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) பின்னேற்பு அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.2610/2017/அ1

பொருள் – 20

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் தினசரி காய்கறி நாளங்காடியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2015–16ம் ஆண்டு திருமதி. வி.என்.கவிதா என்பவருக்கு வழங்கப்பட்டது. மேற்படி குத்தகைதாரர் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி கடைகள் ஒப்படைப்பு செய்யவில்லை. இந்நகராட்சிக்கு எதிராக கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண்.4/2016(சிஎம்ஏ என்டி) வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பாக திரு. சி. ஆர். வினாயகம், அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி வருகிறார். எனவே மேற்படி வழக்கிற்கு வழக்காடு கட்டணமாக ரூ.5000/– வழங்க மேற்படி வழக்குகளுக்கு தனி அலுவலர் அவர்களின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) பின்னேற்பு அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.2610/2017/அ1

பொருள் – 21

இந்நகராட்சியில் கணினி பிரிவில் கீழ்கண்ட கணினிகள் மற்றும் பிரிண்டர்களுக்கு 2018–19ம் ஆண்டில் பராமரிப்பு செய்வதற்கு ஆகும் தோராய செலவு ரூ.3.00 இலட்சத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற பொருள் வைப்பதற்கு தங்கள் அனுமதி கோரப்படுகிறது.

| S.No | QTY | | DESCRIPTION | Nature of work |
|---|---|---|---|---|
| 1 | 1.00 | No | Windows 2003 Xeon server | Service |
| 2 | 7.00 | Nos | Intel Core i3/i5 3220 2GB RAM/ 500GB HD / Key Board/Mouse/DVD Writer | Service |
| 3 | 23.00 | Nos | Intel Processor RAM 1GB CD Drive/15" Monitor | Service |
| 4 | 10.00 | Nos | HP Laser Jet Printer 1020 | Service |
| 5 | 3.00 | Nos | HP Laser Jet Printer P1007 | Service |
| 6 | 1.00 | No | HP Laser Jet Printer P1606DN | Service |
| 7 | 4.00 | Nos | TVS MSP 450 Dot Matrix printer | Service |
| 8 | 5.00 | Nos | HP Laser Jet Printer all in one with scanner | Service |
| 9 | 1.00 | Nos | Line Printer - P5000 Wipro | Service |
| 10 | 1.00 | Nos | 5 KVA UPS | Service |
| 11 | 2.00 | Nos | IHP PSC 1350 printer cum scanner | Service |
| 12 | 5.00 | Nos | Network Switch | Service |
| 13 | 3.00 | No | VPN connectivity Counter | Service |
| 14 | 5.00 | Nos | Optical Mouse | Replacement |
| 15 | 2.00 | Nos | Key Board | Replacement |

<u>அலுவலக குறிப்பு–</u>

மேற்கண்ட கணினிகள் மற்றும் பிரிண்டர்களுக்கு 2018–19ம் ஆண்டில் பராமரிப்பு செய்வதற்கு நகராட்சி நலனை கருத்தில் கொண்டு பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.

பொருள் – 22

இந்நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் தற்போது ஆன்லைன் மூலமாக கணினிகள் மற்றும் சர்வர் இயங்கி வருகின்ற காரணத்தினால் அனைத்து கணினிகளுக்கும் Desk top anti virus and server edition anti virus renewal 2018-19ம் ஆண்டிற்கு தேவைப்படுகிறது. எனவே அவற்றினை வாங்கி வழங்க மன்ற பொருள் வைப்பதற்கு தங்களின் அனுமதி கோரப்படுகிறது.

இதன் தோராய செலவு ரூ.110000/- ஆகும்.

<u>அலுவலக குறிப்பு–</u>

மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகராட்சி நலனை கருத்தில் கொண்டு பொது நிதியிலிருந்து ரூ.110000/– செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.

பொருள் – 31

இந்நகராட்சியில் பயன்பட்டில் உள்ள ஆணையர் ஈப்பு வாகனம் (டிஎன்.19ஜே 3325) பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்வதற்கு

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசன் ஆட்டோமொபைல்ஸ், செங்கல்பட்டு | – | ரூ.3000/– |
| 2. | ஸ்ரீபாலாஜி ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ் | – | ரூ.1200/– |
| | மொத்தம் | – | ரூ.4200/– |

மேற்படி நிறுவனத்தின் மூலம் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது. அதற்குன்டான தொகை ரூ.4200/– யினை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

ந.க.எண்.795/2018/இ1

பொருள் – 32

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2017 கோடைகால குடிநீர் தட்டுப்பாட்டுக்காக 2017 மார்ச்சு மற்றும் ஏப்ரல் மாதங்களில் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகளும் அனுமதியற்ற மோட்டார்களும் 93 எண்ணிக்கையில் துண்டிக்கப்பட்டன. அவற்றை ஏலம் விடுவதற்கு மன்றப்பொருள் அனுப்பப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

1. பொது ஏலம் கோரி மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 33

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார் எண்.12ல் ரேடியோ மலை பகுதியிலும் வார்டு எண்.28 முனிசிபல் காலனி பகுதியிலும் உள்ள ஏற்கனவே பழுதடைந்த நிலையிலுள்ள டாய்லட் யூனிட்ஸ்களை அப்புறப்படுத்தவும் அப்பகுதியில் சிறுவர்கள் விளையாடும் திடல் (Play materials) அமைப்பதற்கு தோராய மதிப்பீடு ரூ,1,90 இலட்சம் ஆகும். மன்றப்பொருள் அனுமதி ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு –

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.